# விளைச்சல் என் கையில்... விற்பனை என் பையில்...!

10.02.2013



இயற்கைப் பாடம் சொல்லும் முன்னாள் தலைமையாசிரியர்..

விவசாயம் செய்ய ஆர்வமும், உழைப்பும் மட்டுமிருந்தால் போதும்.. வயதும், தூரமும் தடையில்லை என்பதை நிரூபித்து வருகிறார், சென்னை சைதாப்போட்டையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தலைமையாசிரியர், சுப்பையா. இயற்கை முறையில் விளைவிப்பதோடு, இயற்கைப் பொருட்கள் விற்பனை அங்காடியையும் நடத்திக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார், இந்த சுப்பையா.

அரக்கோணம் – சோளிங்கர் சாலையில் பதிமூன்றாவது கிலோ மீட்டரில் உள்ள புதூர் அருகில் இருக்கிறது, சுப்பையாவின் நிலம். நெல், வேர்க்கடலை, கொள்ளு, எள், காராமணி, உளுந்து, சாமை.. என கலந்து கட்டி விளைந்து கிடக்கிறது சுப்பையாவின் நிலம். விவசாயத்தின் மேல் எனக்கு ஆர்வம் அதிகம். நிலம் வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டு இருந்த சமயத்தில்தான் பசுமை விகடன் அறிமுகமானது. அதன்பிறகு, இரண்டு வருடத்திற்கு முன்தான் இந்த 10 ஏக்கர் செம்மண் பூமியை வாங்கினேன். இந்தப் பகுதியில் தண்ணீருக்கு பஞ்சமே கிடையாது. போர்வெல் போட்டுத்தான் பாசனம் செய்கிறேன். இரண்டு பேரை வேலைக்கு வைத்திருக்கிறேன். முதல் முறை வேர்க்கடலை, காராமணி, உளுந்து, காய்கறிகளை சாகுபடி செய்தேன். சுமாரான விளைச்சல்தான் கிடைத்தது. காய்கறிகளை தினமும் மார்க்கெட்டிற்கு கொண்டு செல்வதிலும் சிரமம் இருந்தது. அதனால், காய்கறிகளை விட்டுவிட்டேன். இப்போது, 3 ஏக்கரில் வேர்க்கடலை, 1 ஏக்கரில் கொள்ளு, 1 ஏக்கரில் எள், அரை ஏக்கரில் காராமணி, அரை ஏக்கரில் உளுந்து, கால் ஏக்கரில் சாமை, ¾ ஏக்கரில் பாசிப்பயறு என்று சாகுபடி செய்கிறேன். நெல் மட்டும் அறுவடை ஆயிடுச்சு. மற்றவையெல்லாம் நன்றாக விளைந்து நிற்கிறது.

இந்த ஏரியாவில் எரு கம்மியான விலைக்குக் கிடைப்பதால், அதிகளவில் அதை நிலத்தில் கொட்டியிருக்கிறேன். மூலிகைப் பூச்சிவிரட்டியை நானே தயார் செய்து கொள்வேன். டிராக்டர் மூலமாக இயங்கும் ‘டிரம் சீடர்’ ல் வேர்க்கடலையை விதைப்பதால் செலவு குறைந்துவிட்டது. இந்தக் கருவியை பற்றி ‘பசுமை விகடனில்தான் தெரிந்துகொண்டேன். இயற்கை அங்காடியையும் சொந்தமாகவே வைத்திருக்கிறேன். பசுமை சந்தைப் பகுதியில்

இயற்கை விளைபொருட்களை விற்பனை செய்யணும் என்று சொல்லும் விவசாயிகளிடம் உடனே போன் போட்டுவிடுவேன். அது எனக்கும் வியாபாரத்திற்கும் உதவியாக இருக்கிறது. மொத்தத்தில் என்னுடைய ஓய்வு காலத்தைப் பயனுள்ளதாக மாற்றியது, ‘பசுமை விகடன்’ தான் என்றார்.

தொடர்புக்கு
சுப்பையா, செல்போன்: 94453 – 72276

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.02.13** www.vikatan.com